## 85ஆம் ஆண்டு காணும் - நமது திராவிட இயக்க

# இலட்சியப் பயணத் தோழன் 'முரசொலி'க்கு நமது வாழ்த்து!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 14 -

தி.மு.க.வின் அதிகார பூர்வ நாளேடான நம் "முரசொலி' நாளேடு ஆக.10 - தனது 85ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பது அறிந்து மிகவும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வெறும் துண்டுக் கையேடாக 85 ஆண்டுகளுக்கு முன் நமது கலைஞர் பசி நோக்காது, கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது, உழைத்து இன்று அது பல நெருக்கடிகளையும் - 'விடுதலை', 'தீக்கதிர்' ஏடுகளைப் போல நெருக்கடி கால நெருப்



பாற்றையும், சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி சாதனை சரித்திரம் படைத்துவரும் நாளேடு!

தனது எழுத்துக்காக ஒரு பத்திரிகை ஆசிரியரைச் சட்டமன்றத்திற்கு அழைத்துக் கூண்டில் ஏற்ற வைக்கப்பட்டது என்றால் (தோழர் முரசொலி செல்வம் எழுத்தாளர், ஆசிரியர் என்பதால்) அதுவே அதன் விழுப்புண்களின் விழுமியங்களில் ஒன்று.

'முரசொலித்ததால் விடியல் அழைப்பு' மக்களின் அடிமைத்தனத்திலிருந்து 'விடுதலை' கிடைத்து அது 'குடிஅரசாக'ப் பரிமளிக்கும் என்பதை தலைப்புகள் மூலம் மக்களுக்கு உணர்த்திடும் மகத்தான அமைதிப் புரட்சிக்கான ஆயுதங்களில் ஒன்று!

திராவிடர்களின் அரசியல், சமூக, பொருளாதாரப் பண்பாட்டுப் பாதுகாப்பு பயணக் காவல் அரண்களில் ஒன்று.

நூறாண்டு காண விழையும் அதன் தோழமை ஏடான 'விடுதலை'யின் சார்பாகவும், தி.மு.க.வின் தாய்க் கழகத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பலியான அப்பாவி மாணவரையே குற்றவாளியாக்கி

# உண்மையை மூடி மறைக்கப் பார்க்கிறதா த.வெ.க. அரசு?

## கோவை மாணவர் இறப்புக்கு - கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, ஆக.14-

கோவையில் பொறியியல் கல்லூரி மாணவன் அமுதன் கொலை தொடர்பாக 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. கஞ்சா விற்பனையை காட்டிக் கொடுத்ததால் சக மாணவர்களால் மாணவர் அமுதன் அடித்துக் கொலை என புகார் எழுந்துள்ளது. கோவை மாணவன் அமுதன் கொலை தொடர்பாக சக மாணவர்கள் 14 பேர் மீது செட்டிபாளையம் போலீஸ் வழக்குப்பதிவு செய்துள்ளது. மாணவன் அமுதன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் அரவிந்த், சிவரோஹித், ஆராவமுதன், மணி பாலா உள்பட 5 பேரை சிறையில் போலீஸ் அடைத்தது.

இச்சம்பவம் குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



அவரது கண்டனம் வருமாறு:

கோவையில் தனியார் கல்லூரியில் படித்துவந்த முதலாம் ஆண்டு மாணவர், போதைப் பொருள் விற்பனை குறித்து தகவல் தெரிவித்ததற்காகப் போதை பழக்கத்தில் ஈடுபட்ட மாணவர்களால் அடித்து கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் நிலையில், அதை மாணவர்கள் இடையேயான கோஷ்டி மோதல் என்று திசைதிருப்பும் வகையில் வழக்கை முடித்து வைக்கப் பார்க்கிறது த.வெ.க. அரசு.

கல்லூரி நிர்வாகமும் காவல்துறையும் போதைப் பொருள் விற்பனை குறித்து தகவல் அளித்த பின் பாதுகாக்கத் தவறியதால்தான், அம்மாணவர் கொலை செய்யப்பட்டதாக அவரது பெற்றோர் கூறும் நிலையில், பலியான அப்பாவி மாணவரையே குற்றவாளியாக்கி உண்மையை மூடி மறைக்கப் பார்க்கிறதா, தவெக அரசு?

இந்தக் கொலையைச் செய்தவர்கள் மட்டுமின்றி, பாதுகாப்பு வழங்கத் தவறிய காவல்துறையினரையும் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு தனது தவறை மூடிமறைக்கப் பார்க்காமல்

# மாணவர் உயிரைப் பறித்த கொடூரத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தி.மு.க. ஐ.டி.விங் வலியுறுத்தல்!

சென்னை,ஆக.14-

தி.மு.க. ஐ.டி.விங் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

போதைப்பொருளுக்கு எதிராக இருப்பது போல் மேடையில் நாடகமாடிவிட்டு, நிஜத்தில் போதைப்பொருளுக்கு எதிராகப் புகார் கொடுத்தால், புகார் அளித்த மாணவரின் தகவலைக் கசியவிட்டு ஒரு கும்பலே சேர்ந்து அவருடைய உயிரைப் பறித்துள்ளனர்.

இதற்கெல்லாம் பொறுப்பேற்காமல், பொய்யான தகவல்களைக் கூறி டம்மி தவெக அரசு தன்னுடைய தவறை மூடிமறைக்கப் பார்க்கிறது.

இந்தப் பெற்றோர்களின் அழுகுரல் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா, முதல்வர் அவர்களே?

உங்கள் நாடகத்தை நிறுத்திவிட்டு இது போன்ற கொடூரத்திற்கு கடும் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மணப்பாறையில் அரசினர் தொழிற்பயிற்சி

# கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை!

திருச்சி, ஆக.14-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாவட்ட ஆட்சியரிடம் வைத்துள்ள கோரிக்கை வருமாறு:

மணப்பாறை சட்டமன்றத் தொகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி நிறுவனம் அமைத்திட வேண்டி மணப்பாறை மக்கள் நீண்டநாள் கோரிக்கை வைத்ததின் அடிப்



படையில் திராவிட மாடல் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்து கடந்த 04.03.2026 அன்று மணப்பாறை வட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், காந்தி நகர் குமரகிரி மலை அடிவாரத்தில் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள்.

அப்படி அடிக்கல் நாட்டிய தொழிற்பயிற்சி நிறுவனம் தற்காலிகமாக வையம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஒரு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மாணவர்களின் இட நெருக்கடியை கருத்தில் கொண்டு கட்டுமான பணியினை துரிதப்படுத்தி, விரைவில் தொழிற்பயிற்சி நிறுவனத்தை மாணவர்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வர ஆவண செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை மனு அளித்துள்ளதாக அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

## காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் எனக்கூறி

# போலியாகத் தயாரிக்கப்படும் சேலைகள் விற்பனை - தடுத்திட உரிய நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் — க.செல்வம் வலியுறுத்தல்!

புதுடெல்லி,ஆக.14-

இந்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் 377 கேள்வி நேரத்தின் போது பட்டு நெசவு தொழில் சார்ந்த கேள்வி எழுப்பினார்.

காஞ்சிபுரம் பட்டு நெசவுத் தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான நெச



வாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

ஆனால், உண்மையான காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் எனக் கூறி போலியான மற்றும் இயந்திரத்தால் தயாரிக்கப்படும் சேலைகள் விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் ஏமாற்றப்படுவதுடன், பாரம்பரியமிக்க காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளின் நற்பெயரும் பாதிக்கப்பட்டு, உண்மையான நெசவாளர்களின் வருமானமும் குறைந்து வருகிறது.

மேலும், மூலப்பொருட்களின் விலை உயர்வு, போதிய சந்தைப்படுத்துதல் வசதியின்மை, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவு மற்றும் விசைத்தறிகளுடனான போட்டி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நெசவாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து, புவிசார் குறியீடு சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துதல், QRகுறியீடு மூலம் பட்டுச் சேலைகளின் உண்மைத்தன்மையை உறுதி செய்தல், கட்டாயத் தரக்குறியீடு மற்றும் அடையாளப்படுத்துதல், போலி காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளின் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல், நெசவாளர்களுக்கான நிதி மற்றும் நலத்திட்ட உதவிகளை அதிகரித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என திரு. க. செல்வம் வலியுறுத்தினார்.

மேலும், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிகளவில் பிரபலப்படுத்தவும், தலைமுறைகள் கடந்து வந்த பாரம்பரிய நெசவுத் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் நெசவாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கவும் ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

"தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்" என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாட்டில் டிஜிட்டல் —

# தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் — ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14-

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில்,குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் தொலைத்தொடர்பு வசதி குறைவாக உள்ள பகுதிகளில், டிஜிட்டல் மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று ஆண்டுகால காலகட்டத்தில் தமிழ்நாட்டில் அதிவேக பிராட்பேண்ட் இணைய வசதியுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமங்கள், கிராம



ஊராட்சிகள் மற்றும் அரசு பொது நிறுவனங் களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் என்ன?

இதில் தருமபுரி மாவட்டத்தில் பிராட் பேண்ட் இணைய வசதி செய்து தரப்பட்டுள்ள கிராமங்கள், கிராம ஊராட்சிகள் மற்றும் அரசு பொது நிறுவனங் களின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் மொபைல் நெட்வொர்க் சேவை மற்றும் இணைய வசதியை மேம்படுத்த புதிய தொலைத்தொடர்பு உள்கட்டமைப்புகளை அமைத்துள்ளதா? அவ்வாறு அமைத்திருந்தால், அதன் விவரங்கள் என்ன?

மேம்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு இணைப்பின் மூலம் டிஜிட்டல் சேவைகள், மின் ஆளுமை (eGovernance), இணையவழிக் கல்வி மற்றும் தொலை மருத்துவச் சேவைகளை (Telemedicine) தமிழ்நாட்டில் ஊக்குவிக்க எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

தருமபுரி மாவட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து கிராமப்புறப் பகுதிகளுக்கும் நம்பகமான, அதிவேக தொலைத்தொடர்பு மற்றும் பிராட்பேண்ட் இணைய சேவைகளை வழங்குவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள கூடுதல் நடவடிக்கைகள் என்ன? என்று தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகரிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.

## மாதவிடாய் ஆரோக்கியம் — சுகாதாரம் குறித்த

# விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசால் முக்கியத்துவம் அளிக்கப்படுமா?

## மாநிலங்களவையில் — எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14-

திராவிட முன்னேற்றக் கழக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், 11 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு திட்டங்களுக்கு தேசிய சுகாதார திட்டங் களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறதா? என்றும், சானிட்டரி நாப்கின்ஸ்க்கள் குறைந்த விலையில் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு கிடைக்க தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும், கல்வி நிறுவனங்களிலும், அரசு அலுவலகங்களிலும் இதுகுறித்த விழிப்புணர்வு இயக்கங்கள் நடைபெறுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணையமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேலிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மேலாண்மை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்த வேண்டிய திட்டமாகும் என்றும், வளர் இளம் பெண்களுக்கான மாதவிடாய் சுகாதாரத் திட்டம் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், குறைந்த விலையில் தரமான சானிட்டரி நாப்கின்ஸ்கள் பள்ளி மாணவி களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், பல்வேறு விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படுகிறது என்றும், மாநிலங்களவையில் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பல்வேறு தகவல், தொடர்பு சாதனங்களின் உதவியுடனும், கணினி செயலிகள் மூலமாகவும், சுகாதாரப் பணியாளர்களின் வழியாகவும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் பல்வேறு மாநில அரசுகளுடன் இதுகுறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறிப்



பிட்ட இடைவெளியில் நடந்து வருகிறது என்றும், ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறுவதோடு, திட்ட செயலாக்கம், மற்றும் பெருகி வரும் ஆதரவு குறித்தும் அவ்வப்போது மாநில அரசுகளுடன் விவாதித்து ஒன்றிய அரசு தனது செயல் திட்டங்களை வகுத்து வருகிறது என்றும், பள்ளி மாணவிகளிடத்தில் இது குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணைய மைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம் — குமாரபாளையம் தெற்கு

# நகரப் பொறுப்பாளர் ஜி.எஸ்.ஞானசேகர் மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி – ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. – கழக நிர்வாகிகள் அஞ்சலி!

நாமக்கல், ஆக.14:

குமாரபாளையம் தெற்கு நகர பொறுப்பாளராக பணியாற்றி வந்த ஜி.எஸ்.ஞானசேகர் நேற்று முன்தினம் (12.8.2026) புதன் கிழமை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கழகத்தில் நீண்டகாலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றிய ஜி.எஸ்.ஞானசேகர், 2004 முதல் 2009ம் ஆண்டு வரை குமாரபாளையம் நகர இளைஞரணி அமைப்பாளராக பணியாற்றினார். தொடர்ந்து, 2006 முதல் 2011ம் ஆண்டு வரை குமாரபாளையம் நகர் மன்ற உறுப்பினராகவும்



பணியாற்றினார்.

மேலும், கழக பொறுப்புக்குழு உறுப்பினராகவும் அவர் பணியாற்றியுள்ளார். கடந்த 2023ம் ஆண்டு முதல் குமாரபாளையம் தெற்கு நகர பொறுப்பாளராக இருந்து கழகப் பணிகளை மேற்கொண்டு வந்தார்.

மறைந்த ஜி.எஸ்.ஞானசேகர் உடலுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, ஈரோடு தொகுதி மக்களவை நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர் அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி சடங்கு நல்லடக்கம் நேற்று (13.08.2026) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.